# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-29515590

<u>ஆணை நாள் 01.07.2026</u>

<u>முன்னிலை</u>
திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநில தகவல் ஆணையர்

*****

<u>வழக்கு எண். NC 423/H/2024 (SA/8664/A/2023)</u>

திரு ஆர்.காதர் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்
வேலூர் மாநகராட்சி — பொது அதிகார அமைப்பு
வேலூர் மாவட்டம்.

<u>கோரிய தகவல்:</u> மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 16.02.2023 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் வேலூர் மாநகராட்சி கஸ்பா 4வது பையர் லைன் தெரு மற்றும் குறுக்கு தெருவில் புதிய சாலை அமைக்க 36 லட்சம் ஒதுக்கப்பட்டு 90 நாட்களில் முடிக்க நிர்ணயம் செய்யப்பட்டது என்றும் ஆனால் 18 மாதங்கள் ஆகியும் புதிய சாலை அமைக்கவில்லையென்றும், எப்போது அமைக்கப்படும் என்றும், அதன் தேதி வழங்க வேண்டும் என்று தெரிவித்து தகவல்கள் வழங்கக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 10.05.2023 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 08.09.2023 அன்று இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரருக்கு எழுத்து மூலமாக கடிதம் அனுப்பப்பட்டு அவர் இடத்தை ஆய்வு செய்ய தேவையான ஏற்பாடுகளை செய்ய பொது தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. மனுதாரர் 22.06.2024 அன்று ஆணை நிறைவேற்றாப்படாமை மனு தாக்கல்

செய்திருந்ததின் அடிப்படையில்,, இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு ஆர்.காதர் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு. M.குமரவேல், கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

## ஆணை

இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 11.12.2023 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக மனுதாரரை கள ஆய்வு செய்வதற்கு அனுமதிக்குமாறு ஆணையத்தால் ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேல்முறையீட்டாளர் கஸ்பா பயர்லைன் பகுதியில் கள ஆய்வு செய்து கொள்ள 15.12.2023 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நேரில் பார்வையிட்டுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது எனத் தெரிவித்து அதற்குண்டான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர் பொது தகவல் அலுவலர் அளித்த தகவல் தனக்கு நாளது வரை கிடைக்கவில்லை என தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 16.02.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பான ஆவணங்களை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டுக் கோரும் பட்சத்தில், மனுதாரரிடமிருந்து உரிய கட்டணத்தை பெற்று, அவரால் கோரப்படும் ஆவணங்களை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, மனுதாரருக்கு வழங்கி, அதனை ஒளிநகலெடுத்து, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ

அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக 04.08.2026 அன்று ஆணையத்திற்கு நேரிடையாக சமர்ப்பிக்குமாறு, பொது தகவல் அலுவலருக்கு இதன்மூலம் உத்திரவிட்டு இவ்வழக்கின் விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். NC 423/H/2024 (SA/8664/A/2023)
பெறுநர்
பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்
வேலூர் மாநகராட்சி
வேலூர் மாவட்டம்.

மேல்முறையீட்டாளர்

திரு ஆர்.காதர்
18/A சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு
இக்ரா பள்ளி அருகில்
வேலூர் 632 001.

Copy to : File
VM/PA